பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
15 08-2025 FRIDAY 6.30 PM

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 79-ஆவது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

2. இளையோர் நலனுக்கான ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத்திட்டம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

3. விடுதலை போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் 22 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக விளையாட்டுப் போட்டிகளின் Roller Skating பிரிவில் இந்தியாவின் Anand Kumar Vel Kumar வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

நாட்டின் 79-ஆவது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தில்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார்.

ஒரு மணிநேரம் 43 நிமிடம் ஆற்றிய உரையில் பல்வேறு துணிச்சலான அறிவிப்புகளை பிரதமர் வெளியிட்டார்.

அணுசக்தி திறன் அடுத்த 22 ஆண்டுகளுக்குள் பத்து மடங்கு அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

<u>(Sound Byte – மோடி (1) - 45 Sec. )</u>

விண்வெளித்துறையிலும் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

<u>(Sound Byte – மோடி (2) - 48 Sec.</u> )

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு தொடர்பான சீர்திருத்தங்கள் குறித்த அறிவிப்புகள் தீபாவளி பரிசாக வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கென பணிக்குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இளையோர் நலனுக்கான ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத்திட்டம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக பிரதமர் அறிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில் விவசாயிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

தமிழகத்திலும் சுதந்திர தின கொண்டாட்டங்கள் உற்சாகமாக நடைபெற்றன.

சென்னையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார்.

விடுதலை போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் 22 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக அவர் அறிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில அரசின் பல்வேறு விருதுகளை முதலமைச்சர் வழங்கினார்.

மாவட்டங்களில் ஆட்சியர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்தனர்.

முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமில் யானைகள் தேசியக்கொடியுடன் அணிவகுத்து நிற்க தேசியக்கொடி ஏற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – சரவணன் – 45 Sec.)*

பிரதமரின் சுதந்திர தின உரையில் அடுத்த 25 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டத்தை தெரிவித்ததாக சேலத்தை சேர்ந்த தொழில்முனைவோர் லதா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – லதா – 45 Sec. )*

*பிரதமர் தமது உரையில் விவசாயிகள் நலன் குறித்து எடுத்துரைத்தது வரவேற்கத்தக்கது என்று காவிரி டெல்டா கடைமடை விவசாய சங்கத்தின் தலைவர் திரு தமிழ்செல்வன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*( Sound Byte – தமிழ்செல்வன் – 38 Sec. )*

*<<<<<<>>>>>*

*தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*
*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 47 Sec. )*

*<<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில், மாணவர்கள் இடைவிடாமல் 79 நிமிடம் பங்கேற்ற ஸ்கேட்டிங் நிகழ்ச்சி நடைபெற்றது.*

----------------

*நாமக்கல்லில் தனியார் மருத்துவமனை கட்டிடத்திற்கு பெயின்ட் அடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கிரேன் மின்சார கம்பி மீது விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர்.*

-------------

*காஞ்சிபுரம் மாவட்டம் கீழம்பி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தூய்மைப் பணியாளர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.*

-----------------

*திருச்சி – பாலக்காடு டவுன் இடையேயான விரைவு ரயில் வரும் 18-ஆம் தேதி முதல் Irugur -ல் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

*<<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*உலக விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவின் Anand Kumar Vel Kumar வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.*

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் Roller Skating பிரிவில், அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

-----------

*Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 15-10, 12-15, 15-8 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Ririna Hiramoto -வை வென்றார்.*

---------------

*BEGA ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat Singh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், தென்னாப்பிரிக்காவின் Hayley Ward -ஐ வென்றார்.*

*<<<<<<END>>>>>*